# කාර්යසාධන වාර්තාව
# செயலாற்றுகை அறிக்கை
# Performance Report

# 2014

## රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
## அரச கணக்குகள் திணைக்களம்
## Department of State Accounts


| | | |
|---|---|---|
| මහ භාණ්ඩාගාරය | பொதுத் திறைசேரி | General Treasury |
| කොළඹ 01 | கொழும்பு 01 | Colombo 01 |

# பொருளடக்கம்


**1. அறிமுகம்** 01

**2. மீளாய்வு** 02

**3. அரசிறைப் புள்ளிவிபரம் மற்றும் முகாமைத்துவத் தகவல் பிரிவு** 03

**4. பேரண்டக் கணக்கு மற்றும் அட்டுறுக் கணக்கு இலக்கம்**

4.1 நிதிக் கூற்றுகளைத் தயாரித்தல் 05

4.2 கிரவுன் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வளவு செய்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை 05

4.3 பொது வைப்புக் கணக்கு மேற்பார்வையும் தொழிற்பாடும் 06

4.4 பிரதான பேரேட்டைத் திறத்தலும் அது தொடர்பான கணக்கு நடவடிக்கைகளை தொழிற்படுத்தலும் 06

4.5 திறைசேரியின் சார்பில் அரசாங்கக் கணக்குகள் செயற்குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தல் 06

4.6 பொதவான சுற்றறிக்கைகளை வெளியிடுதல் மற்றும் பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் உரிய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல் 07

**5. அரசிறைத் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு**

5.1 மாதாந்தக் கணக்குகளின் சுருக்கத்தை சேகரித்தல் 07

5.2 ஆசியப் பிராந்தியத்தில்

அரசாங்க கணக்கு அமைப்புகளின் சங்கம் 09

**6. தொகுதி அபிவிருத்தி, பயிற்சி மற்றும் நிர்வாகப் பிரிவு**

6.1 அரசாகங்க கணக்கீட்டின் மென்பொருளை மேம்படுத்தல், அது தொடர்பான கணக்கு பதவியினரைப் பயிற்றுவித்தல் 09

6.2 முற்பணக் கணக்குகளை தொழிற்படுத்துதல் 11

**7. நிறுவன மற்றும் நிருவாக நடவடிக்கை**

7.1 பதவியினர் 16

7.2 கட்டமைப்பு அட்டவணை 17

7.3 வளங்களை வினைத்திறனுடன் பயன்படுத்தல் 18

7.4 திறன் விருத்தி மற்றும் அறிவு விருத்தி 18

**8. அரசிறைத் தகவல்** 20

8.1 அரசிறைச் செயலாற்றுகை 21

**9. 2014 நடவடிக்கைத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் முன்னேற்றம் 22-31**

# 1. அறிமுகம்

அரசாங்க அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவிடும் அலகுகள் அதேபோன்று மாவட்டச் செயலகங்கள் மற்றும் மாகாண சபைகள் என்பவற்றைக் கூட்டிணைத்து அரசாங்க வருமானம், அரசாங்க செலவினம், முற்பணக் கணக்குகள் மற்றும் வைப்புக் கணக்குகள் உட்பட இலங்கையின் அரசிறை நடவடிக்கைகளை அறிக்கையிடும் பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனம் என்ற வகையில் அரச கணக்குகள் திணைக்களம் தொழிற்படுகின்றது.

எமது நோக்காக இருப்பது அரசிறை தகவல்கள் சம்பந்தமாக உன்னத நிலையமாக மாறுவதாகும். நிதி ஒழுங்கு விதிகளின் பிரகாரம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் அரசிறைத் தகவல்களை வினைத்திறனுடனும் உண்மையானதாகவும் அறிக்கையிடும் பொருட்டு கணணி தொழினுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தி ஏற்றுக்கொள்ளப்பட்ட தர நிர்ணயங்களைப் பின்பற்றி தகவல்களை சேகரித்தல் மற்றும் வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றன. செலவினங்கள் மற்றும் வருமானங்கள் அனைத்தினதும் தலைப்புக்களின் மூலம் ஒன்று திரட்டப்படுகின்ற நிதித் தகவல்களின் மூலம் மாதாந்தம் கணக்கு அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்ற அதேவேளையில், அரசாங்கத்தின் நிதிச் செயற்பாடுகள் பற்றி வருடாந்தக் கணக்குகளை மார்ச் மாதத்தினுள் தயாரித்து நிறைவு செய்யப்படுகின்றது. அதேவேளையில் அதற்கு இணையாக ஏனைய முகாமைத்துவத் தகவல்களையும் இதன் கீழ் அரச கணக்குகள் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகின்றது.

நிதி ஒழுங்கு விதி 430 இல் நிர்ணயிக்கப்பட்டுள்ளவாறு திறைசேரி புத்தகங்களிலிருந்து வெளிப்படுத்தப்படுகின்ற ஏனைய நிதித் தகவல்களை அறிக்கையிடுவதற்காகவும் கணக்காய்விற்காகவும் அந்தத் தகவல்கள் ஒவ்வொரு வருடத்தினதும் மார்ச் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிக்கதும் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

இதற்கு மேலதிகமாக பகுப்பாய்வு நடவடிக்கைகள் மற்றும் அரசிறை முகாமைத்துவப் பணிகளுக்குத் தேவைப்படும் அரசிறைத் தகவல்கள் மற்றும் தரவுகளை இலங்கைப் பாராளுமன்றம் அரசிறைக் கொள்கைத் திணைக்களம் மற்றும் இலங்கை மத்திய வங்கிக்கு ஆரம்பமாக சமர்ப்பிக்கப்படுகின்றது. கணக்காய்வாளர் அதிபதியினால் கணக்காய்வு செய்யப்படுகின்ற குடியரசுக் கணக்குகள் நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் வெளியிடப்படுகின்றது. அதன்மூலம் இந்தத் தகவல்கள் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக அரசிறைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச தர நிர்ணயங்களின் பிரகாரம் தயாரிக்கப்படுகின்ற வருமான மற்றும் செலவின பகுப்பாய்வு மற்றும் வரவு செலவு நிலைமைகள் பற்றிய குறிப்புக்கள் உட்பட ஏனைய அரசிறைத் தரவுகளும் மேற்சொன்ன அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

அரசாங்க அமைச்சுக்களுக்கும், திணைக்களங்களுக்கும் தீர்மானம் எடுக்கும் நடவடிக்கைகளுக்காகவும் இணக்கப்பாடு மற்றும் அறிக்கையிடல் என்பவற்றை மேம்படுத்துவதற்காகவும் அரசிறைத் தகவல்களை சமர்ப்பித்தல் மற்றும் சகல தரப்பினருக்காகவும் அரசாங்கத்தின் ஒருங்கிணைந்த வருடாந்த நிதிக் கூற்றுக்களை வழங்குனர் என்ற வகையில் தொழிற்படுவதும் எமது பிரதான செயற் பணிகளிடையே அடையாளம் காணப்பட்டுள்ளது.

## 2. மீளாய்வு

2014 ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டவாறு திணைக்களம் தனது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாக இருந்துள்ளது. அவ்வாறு திட்டமிடப்பட்ட கடமைகளுக்கு மேலதிகமாக உயர் முகாமைத்துவங்களின் மூலம் ஒப்படைக்கப்படுகின்ற பல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டியேற்படுகின்றது. அதனிடையே உத்தேச திறைசேரி ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தகவல் தொகுதியைத் (Integrated Treasury Management Information System) - (ITMIS) தயாரிக்கும் நடவடிக்கைகளுக்கும் பங்களிப்புச் செய்தமை பிரதானமான விடயமாகும். அந்த நடவடிக்கைகளின் போது தொடர்புடைய அலகுகளுக்கு தொடர்ந்தும் எமது ஆலோசனைகள் தேவையாக இருந்தது. அதனால் சகல பதவிநிலை உத்தியோகத்தர்களினதும் ஒத்துழைப்பு அதன் பொருட்டு வருடத்தினுள் குறிப்பிடத்தக்களவில் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் அரசிறை புள்ளிவிபரம் 2001 கையேட்டுக்கு இணங்கியதாக அரசிறை புள்ளிவிபரத் தகவல்களின் தயாரிப்பது பற்றிய தொழினுட்ப உதவிக்காகவும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி நிதிகளுடன் சுமார் மூன்று வார காலம் மேற்சொன்ன பயிற்சிகளில் ஈடுபட்டிருந்தது.

அரசிறைத் தகவல்களை அறிக்கையிடுவதனை மேம்படுத்துவதற்காகவும் அவற்றின் தரத்தையும் பேணுவதற்காகவும் அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய அலுவலர்களை தொடர்ந்தும் அறியச் செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆற்றல்களை போசிக்கும் பொறுப்புக்களையும் திணைக்களத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டது. இதன் போது எமது திணைக்களத்தின் நிபுணத்துவ அறிவின் ஊடாக நிர்மாணிக்கப்பட்ட Windows Base புதிய CIGAS மென்பொருளினை பயன்படுத்துவதன் ஊடாக கணக்கு அறிக்கைகளை உரிய விதத்தில் தயாரித்து உரிய கால எல்லைக்குள் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தமை அரச கணக்குகளைத் தயாரிக்கும் நடவடிக்கையில் தெளிவான மாற்றமொன்றை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

நிதியாண்டின் இறுதியில் கணக்குகளை மூடுதல் பற்றி தேவையான வழிகாட்டல்களை சகல அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்குவதன் மூலம் தற்போதிருக்கும் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் தர நிர்ணயங்களுக்கு இணங்கியதாக அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்குகளைத் தயரிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல் திணைக்களத்தின் மற்றுமொரு பொறுப்பாக

இருந்தது. அதன்மூலம் உரிய கால வரையறைக்குள் கணக்காய்வாளர் அதிபதியினால் சான்றுப்படுத்தப்பட்ட குடியரசுக் கணக்குகள் நிதி, திட்டமிடல் அமைச்சின் வருடாந்த அறிக்கையில் சேர்ப்பதற்கான பொறுப்புக்களை இலகுபடுத்துகின்றது. மேலும் உரிய விதத்தில் அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீட்டுக் கணக்குகள், வருமானக் கணக்குகள் மற்றும் முற்பணக் கணக்குகளைத் தயாரித்து கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்தக் கணக்குகளின் தரவுகளை பிரதான கணக்குத் தொகுதிக்கு இணையாக சான்றுப்படுத்துவதும் தனது பொறுப்புக்களுக்குள் அதி உன்னத மட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது.

நிதி ஒழுங்குவிதிகளின் கீழும் ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு இணங்கியதாகவும் அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கீடுகள் மாற்றுப் படிவங்களை பரிமாற்றிக் கொள்ளுதல் மற்றும் மேலதிக ஏற்பாடுகளை ஏற்பாடு செய்தல் போன்றவை சம்பந்தமாகவும் கடும் மேற்பார்வையுடன் தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்துடன் இணைந்து உரிய விதத்தில் அவற்றைக் கணக்கு வைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இந்த சகல நடவடிக்கைகளின் மூலமும் சரியானதும் தர நிர்ணயங்களைக் கொண்டதுமான அரச கணக்குகள் தகவல்களை வழங்குவதற்காக உயர்ந்த பட்ச முயற்சிகளை அரச கணக்குகள் திணைக்களம் ஈடுபட்டிருந்தது.

மேற்குறிப்பிட்ட பொதுவான மீளாய்வுக்குரியதாக திணைக்களத்தின் ஒவ்வொரு பிரிவுகளினதும் பங்களிப்புகள் 2014 ஆம் ஆண்டு நடவடிக்கைத் திட்டத்தின் இலக்குகளுக்கு இணங்கியதான செயலாற்றுகை பின்வருமாறு.

## 3. அரசிறை புள்ளிவிபரம் மற்றும் முகாமைத்துவ தகவல் பிரிவு

அரச கணக்குகளில் காணப்படுகின்ற அரசிறை நடவடிக்கைகள் பற்றிய தகவல் 1986 ஆம் ஆண்டின் அரச நிதி புள்ளிவிபரவியல் (Government Finance Statistics) கையேட்டில் தர நிர்ணயங்களுக்கு ஏற்ப தயாரித்தல் மற்றும் பொருளாதார வகைப்படுத்தலின் பிரகாரம் அரசாங்க வருமானம் மற்றும் அரசாங்க செலவினம் பற்றிய அடிப்படை புள்ளிவிபரவியல் குறிப்புக்களைத் தயாரித்து தேவையின் அடிப்படையில் அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அதேபோன்று அரச நிதி புள்ளிவிபரவியல் (Government Finance Statistics) 2001/14 இல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கையேட்டின் பிரகாரம் தயாரிக்கும் தயார் நிலைக்காக தேவையான அடிப்படை நடவடிக்கைகளும் இந்தப் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட்டது. 2014 மார்ச் 31 ஆம் திகதி முதல் ஏப்ரல் 03 ஆம் திகதிக்கு இடைப்பட்ட கால எல்லையில் சர்வதேச நாணய நிதியத்தின் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அங்கத்தவர்கள் இருவரைக் கொண்ட தூதுக் குழுவின் மூலம் புதிய முறைமை பற்றிய தொழினுட்ப ஒத்துழைப்பு செயலமர்வொன்று நிதி அமைச்சுக்குரிய மிலோதா நிறுவனத்தில் இந்தப் பிரிவின் தலைமையின் கீழ் நடாத்தப்பட்டது. இலங்கை மத்திய வங்கி, நிதி ஆணைக்குழு மற்றும் அரசிறைக் கொள்கை, தேசிய வரவு செலவு, பொதுத் தொழில்முயற்சி, திறைசேரி

செயற்பாடுகள், வெளிநாட்டு வளங்கள், முகாமைத்துவக் கணக்காய்வு, தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல், விலை மதிப்பீடு போன்ற திணைக்களங்களின் அலுவலர்களும் தேவைக்கேற்ற விதத்தில் இதில் பங்குபற்றினர். இதன் போது அரச நிதிக் கணக்குத் தரவுகள் 2001/ 14 கையேட்டில் அறிமுகப்படுத்தப்பட்ட அரச நிதிப் புள்ளிவிபரவியல் குறிப்புகளுக்கு பொருந்தக்கூடிய மாதிரிப் படிவத்தை (Mapping) பூர்த்தி செய்வது பற்றிய புரிந்துணர்வும் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது.

திறைசேரி ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தகவல் தொகுதியை (Integrated Treasury Management Information System) அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இந்தப் பிரிவும் பங்களிப்பை வழங்கியுள்ளது. அந்த நிகழ்ச்சித்திட்டங்களின் மூலம் தரவுகளை அறிக்கையிடும் போது அரச நிதிப் புள்ளிவிபரங்களை சீராக்கம் செய்கின்ற விதம் பற்றி தேவையான தகவல்கள் வழங்கப்பட்டது.

மத்திய வங்கியின் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது தேவைப்படுகின்ற ஒரு சில அரச நிதித் தகவல்களை தயாரித்து வழங்குதல் மற்றும் அந்த தரவுகள் பற்றி பொருளாதார ஆய்வுத் திணைக்களத்துடன் கூட்டிணைப்பை பேணிக் கொள்வதும் இந்தப் பிரிவின் மற்றுமொரு பொறுப்பாக இருந்தது. அரசாங்க கணக்காய்வு அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளின் பிரகாரம் 2005 – 2013 வரை வருடாந்தம் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டின் ஊடான உருவான நிலையான சொத்துக்கள் மற்றும் அவற்றின் நிதி வழிகள் பற்றிய விஸ்தீரண அறிக்கையைத் தயாரித்தல் இந்தப் பிரிவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் அந்த நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரசாங்க அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் நடவடிக்கையை அடிக்கடி மேற்பார்வை செய்து அவற்றைத் துரிதப்படுத்துவதற்கு தேவையான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்ற அதேவேளையில், 2014 ஆம் ஆண்டின் இறுதியில் விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கிடைத்த 6,428 அரசாங்க சொத்துக்களில் 5,664 சொத்துக்களின் மதிப்பீட்டு நடவடிக்கைகளை பூர்த்திசெய்யக் கூடியதாக இருந்தது. அதற்கு மேலதிகமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம், மது வரித் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் அரசாங்க சொத்துக்களை ஒன்று திரட்டுவது சம்பந்தமான அறிக்கையை தயாரிப்பதும் அவற்றை ஆய்வு செய்வதும் மேற்கொள்ளப்பட்டது.

2014 ஆம் ஆண்டின் அரச முதலீட்டு நிகழ்ச்சித்திட்டங்களை மேற்பார்வை செய்து அவற்றிலுள்ள ஒரு சில மெதுவான கருத்திட்டங்கள் பற்றி வலியுறுத்திக் கூறுவதுடன் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டுகளின் அவற்றின் நிதி முன்னேற்றங்கள்

பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கை தேவையான முன்வரும் நடவடிக்கைகளின் பொருட்டு கருத்திட்ட மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

கடந்த சில வருடங்களாக மாகாண சபைகளின் மூலம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு இதுவரையில் அனுப்பப்படாத விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியப் பங்களிப்புத் தொகை பற்றி விசாரித்து நிலுவையாகவுள்ள பங்களிப்புத் தொகையை ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமையும் ஏனைய சாதாரண கடமை நடவடிக்கைகளின் இடையே மேற்கொள்ளப்பட்டது.

## 4. பேரண்ட மற்றும் அட்டுறு கணக்கு பிரிவு

### 4.1 நிதிக் கூற்றுகளைத் தயரித்தல்

2014 ஆம் ஆண்டில் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, மற்றும் வைப்புக் கணக்குகளைத் தயாரித்தல் சம்பந்தமாக 03 அரச கணக்குகள் சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக செலவினத் தலைப்பு 202 மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவுகளின் மதிப்பீட்டுத் தொகை உண்மைச் செலவு அடங்கிய 2013 ஆம் ஆண்டிற்கான ஒருங்கிணைந்த ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு தயாரிக்கப்பட்டுள்ளன. விசேடமாக இலங்கைக் குடியரசின் 2013 ஆம் ஆண்டுக்குரிய அரசிறைச் செயலாற்றுகை, நிதி நிலைமை, பணப் பாய்ச்சல் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமைகளை வெளிப்படுத்தும் விதமாகத் தயாரித்து, உரிய தினத்திற்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கும், அது சம்பந்தமான கணக்காய்வு அபிப்பிராயத்தைப் பெற்றுக்கொள்ளல், 2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்பு) சட்டத்தின் 13(1) பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் குடியரசின் கணக்குகளை பிரசித்தப்படுத்துவது இந்த வருடத்தின் உரிய தினத்திற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 4.2 கிரவுண் முகவர்களினூடாக பொருட்கள் கொள்வனவு செய்வதனை கூட்டிணைக்கும் நடவடிக்கை

சுகாதார அமைச்சு மற்றும் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு அத்தியவசியமாகத் தேவைப்படும் மருந்துப் பொருட்களையும் அச்சுக் கடதாசிகளையும் கிரவுண் முகவர்களினூடாகப் பெறுவதற்குத் தேவையான நேரடித் தலையீடு இந்தத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், அதன் கீழ் 2014 ஆம் ஆண்டிற்குள் சுகாதார அமைச்சுக்குரிய இன்டென்டு 19 பொருட்களைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பெறுமதி ரூபா 128 மில்லியன் ஆகும். அதேபோன்று ஆட்பதிவுத் திணைக்களம் இன்டென்டு 4

பொருட்களைப் பெறுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதேவேளையில், அதன் பெறுமதி ரூபா 45 மில்லியன் ஆகும்.

## 4.3 பொதுவைப்புக் கணக்குகளின் கண்காணிப்பு மற்றும் தொழிற்பாடு

தற்போது வைப்பு பேரேட்டில் 15 தொகுதிகளின் கீழ் வைப்புக் கணக்குகள் திறக்கப்படுகின்றன. அந்த வைப்புத் தொகைகளினிடையே 2014 ஆம் ஆண்டின் 03 வைப்புத் தொகைகளின் கீழ் 27 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தக் கணக்குகளைத் திறக்கும் போது 6000/10 வெளிநாட்டு உதவி நன்கொடைத் தொகுதியின் கீழ் 17 கணக்குகளும் 6000/15 நானாவித வைப்புத் தொகுதியின் கீழ் 05 கணக்குகளும், இதற்கு மேலதிகமாக 05 மாவட்டச் செயலகங்களுக்காக தானியங்களைக் கொள்வனவு செய்வதற்கு 6000/11 தொகுதியின் கீழ் தானியங்களைக் கொள்வனவு செய்யும் சுழற்சி நிதி எனும் பெயரில் 05 கணக்குகளும், பொது வைப்புப் பேரேட்டில் புதிதாகத் திறக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக 2014 ஆம் ஆண்டின் 8,300 தொகுதியின் கீழ் பிரதான பேரேட்டில் வெளிநாட்டுக் கடன்களைப் பெறும் பொருட்டு 26 கணக்குகள் திறக்கப்பட்டுள்ளன. இதன் கீழ் கிராமிய மற்றும் பிராந்திய பாலம் அபிவிருத்தி செயற்திட்டங்கள் 5 இற்கும், வைத்தியசாலை மற்றும் சுகாதார அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 03 இற்கும், நீர் வழங்கல் மற்றும் துப்பரவு ஏற்பாட்டு அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 09 இற்கும், பெருந் தெருக்கள் அபிவிருத்திச் செயற்திட்டங்கள் 03 இற்கும், பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி செயற்திட்டங்கள் 04 இற்கும், சக்திவலு மற்றும் வலையமைப்புச் செயற்திறன் செயற்திட்டங்கள் 02 இற்கும், இந்த கடன் தொகைகள் செலவளிக்கப்பட்டுள்ளன.

## 4.4 பிரதான பேரேட்டைத் திறத்தல் மற்றும் அது தொடர்பான கணக்கு நடவடிக்கைகளை தொழிற்படுத்துதல்

2014 ஆம் ஆண்டினுள் 59 அரசாங்க அமைச்சுக்கள், 93 திணைக்களங்கள், 22 விசேட செலவு அலகுகள், 9 மாகாண சபைகள் மற்றும் 25 மாவட்டச் செயலகங்களின் கணக்கு நடவடிக்கைகளைத் தொழிற்படுத்துதல் மற்றும் அதற்கான கணக்கீட்டுச் சேவை அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில், மேலதிக ஒதுக்கீடு வழங்குதல் சம்பந்தமாக 714 அனுமதிப் பத்திரங்களை நிதி ஒழுங்கு விதி 66 மாற்றல் பத்திரம் 1590, நிதி ஒழுங்கு விதி 69 இன் கீழ் 231 ஒதுக்கீட்டு மாற்றத்திற்காக கணக்கு வைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 4.5 திறைசேரியின் பொருட்டு அரச கணக்குகள் செயற்குழுவை பிரதிநிதிப்படுத்தல்

2014 ஆம் ஆண்டிற்காக அரசாங்கக் கணக்கு செயற்குழுக் கூட்டங்களின் 56 அமர்வுகளை நடாத்தவிருந்த போதிலும் உரிய தினத்தில் நடாத்தாமல் பிரிதொரு தினம் வழங்கப்பட்டதன் காரணமாக கணக்கு செயற்குழுக் கூட்டங்களின் 44 அமர்வுகள் மாத்திரம் இடம்பெற்ற அதேவேளையில் இதற்காக பங்குபற்றி திணைக்களப் பிரதிநிதிகளினால் கூட்டங்களின் போது ஏற்படுகின்ற அரச கணக்குப் பிரச்சினைகள் சம்பந்தமாக தொழில்ரீதியான தலையீடு வழங்கப்படுகின்றது.

## 4.6 பொதுவான சுற்றறிக்கைகளை வெளியிடுதல் பல்வேறு அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் தொடர்புடைய கணக்கு ஆலோசனைகளை வழங்குதல்

மாளிகாவத்தை செயலகத் தொகுதி மற்றும் கடற்கரை வளங்கள் முகாமைத்துவக் கருத்திட்டத்திற்காக நிலுவையாகவுள்ள வாடகையை பதிவழித்தல் சம்பந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஆலோசனைகளை வழங்குதல், 2013 நவம்பர் மாதத்திற்கான வருமான இலக்கம் 1001:03:00 இன் கீழ் வருமானத்தை ஒன்று திரட்டல் 2014 ஆம் ஆண்டின் திருத்தப்பட்டுள்ளது என்பதும் அது சம்பந்தமாக எதிர்கால நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றை அரசிறைக் கொள்கைத் திணைக்களத்திற்கு அனுப்புமாறு இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்திற்கு ஆலோசனை வழங்கியமை, அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவினங்களுக்குரிய கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்துகின்ற அரசாங்க நிறுவனங்களின் கணக்கு வைத்தல் பற்றிய முறைமையொன்றைத் தயாரிப்பதற்காக தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்குதல் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.

ITMIS கருத்திட்டத்திற்குரிய அரச கணக்குகள் பற்றி தற்போது காணப்படும் முறைமை மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் பற்றிய பரிந்துரை மற்றும் யோசனைகளை வழங்கியமையும் 2014 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது. அட்டுறு அடிப்படையின் கீழ் அரச கணக்குகளை வைத்தல் தொடர்பான நடவடிக்கை நிகழ்ச்சித்திட்டங்களை தயாரித்து திறைசேரி செயலாளரின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகின்ற அதேவேளையில் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அட்டுறு அடிப்படையில் அரச கணக்குகளை வைப்பதற்குரிய சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன.

# 5. அரசிறைத் தகவல் மற்றும் அறிக்கையிடல் பிரிவு

## 5.1 மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சேகரித்தல்

2014 ஆம் ஆண்டில் 59 அமைச்சுக்கள், 25 மாவட்டச் செயலகங்கள், 121 திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் மாதாந்தக் கணக்குகச் சுருக்கங்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. 2013 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினதும் குறைநிரப்பு மதிப்பீட்டினதும் மூலதனம் மற்றும் மீண்டெழும் செலவுகளாக ஒதுக்ககப்பட்டிருந்த தொகை 2,751 பில்லியன் ரூபா ஆகும். தொழிற்பாடுகளின் சிக்கல் வாய்ந்த தன்மை, கொடுக்கல் வாங்கல் முறைகள் மற்றும் நிறுவனங்களின் அளவு போன்ற விடயங்கள் அடிப்படையில் திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்கள் இரண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் மாதாந்தக் கணக்குச் சுருக்கத்தை சமர்ப்பிக்க வேண்டிய இலக்குத் திகதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த வருடம் தொடர்பான மாதாந்த கணக்கு தரவுகளை செய்ய வேண்டிய திகதியைக் குறிப்பிட்டு அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பிப்பதற்கு தாமதித்த நிறுவனங்கள் குறிப்பிடத்தக்க அளவில் இருப்பதாக வருடத்தின் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட போதும், பின்னர் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்ட நினைவூட்டல்கள் மூலம் வருடம் முடிவடையும் போது தொடர்புடைய நிறுவனத்தினால் உரிய திகதிக்கு முன்னர் மாதாந்தக் கணக்கு சுருக்கத்தை சமர்ப்பித்தலானது மகிழ்ச்சிககரமான மட்டத்தை அடையப்பெற்றது என்பதை கீழே தரப்பட்டுள்ள பொதுத் திறைசேரியின் கணனி அச்சிடல் இணையத்தளத்திற்கு வெளியிடப்பட்டுள்ள திகதிகளின் மூலம் தெளிவாகின்றது. அதன் பிரகாரம் அந்தந்த மாதத்தின் உண்மைக் கணக்கு தகவல்களை முன்வரும் மாதத்தில் நடுப்பகுதியாகும் போது வெளியிடக் கூடியதாக இருந்ததென்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

| மாதம் | திறைசேரி கணனி அச்சிடலை வெளிப்படுத்திய திகதி |
|---|---|
| சனவரி | 2014 மார்ச் 20 |
| பெப்ரவரி | 2014 மார்ச் 26 |
| மார்ச் | 2014 ஏப்ரல் 24 |
| ஏப்ரல் | 2014 மே 19 |
| மே | 2014 ஜூன் 16 |
| ஜூன் | 2014 ஜூலை 11 |
| ஜூலை | 2014 ஆகஸ்ட் 14 |
| ஆகஸ்ட் | 2014 செப்டம்பர் 12 |
| செப்டம்பர் | 2014 ஒக்டோபர் 15 |
| ஒக்டோபர் | 2014 நவம்பர் 14 |
| நவம்பர் | 2014 டிசம்பர் 24 |
| டிசம்பர் | 2015 சனவரி 22 |

இதற்கு மேலதிகமாக சேகரிக்கப்பட்ட செலவு மற்றும் வருமானத் தகவல்களை தொடர்ந்தும் பகுப்பாய்வு செய்து தீர்மானம் எடுப்பதற்காக அந்த தகவல்கள் இலங்கை மத்திய வங்கி, புள்ளிவிபரவியல் திணைக்களம், அரசாங்க நிதிக் கொள்கைத் திணைக்களம், திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களம் மற்றும் வரவு செலவுத் திணைக்களம் ஆகிய நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

## 5.2 ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கம்

ஆசிய பிராந்தியத்தின் அரச கணக்குள் அமைப்புகளின் சங்கத்தை (AGAOA) தாபிப்பதற்கு முன்னோடியாக இருந்து, அதன் ஆரம்ப உறுப்பினராகிய இலங்கை 2014 ஆம் ஆண்டினுள் இந்தச் சங்கத்தின் பொருளாளராக நடவடிக்கை மேற்கொண்ட அதேவேளையில், இந்தத் திணைக்களம் சங்கத்தின் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்தக் கணக்குகளைத் தயாரித்துள்ளது. இந்த ஆண்டிலும் சங்கத்தின் நிதிப் பொறுப்பை வகித்து பிராந்திய ரீதியில் அரச கணக்குள் திணைக்களத்தின் சேவை வியாபித்துள்ளது.

## 6. முறைமைத் தொகுதி, பயிற்சி மற்றும் முற்பணக் கணக்குப் பிரிவு

### 6.1 அரசாங்கக் கணக்கீட்டு மென்பொருளை மேம்படுத்துதல், அது தொடர்பாக கணக்குப் பதவியினருக்கு பயிற்சியளித்தல்

மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபைகளினதும் சகல அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் பயன்படுத்தப்படுகின்ற CIGAS கணணி மென்பொருள் தொகுதி அபிவிருத்தி பராமரிப்பு பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் என்பன இந்தப் பிரிவின் பொறுப்பாகும். அதற்கு மேலதிகமாக GPS கணணி மென்பொருள் தொகுதி பற்றியும் தேவையான சந்தர்ப்பங்களில் பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல் என்பன மேற்கொள்ளப்படுகின்றது.

அதன் பிரகாரம், 2014 ஆம் ஆண்டில் Windows அடிப்படையிலான புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டங்களில் தொடர்ந்தும் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்களை மேற்கொண்டு 2015 ஆம் ஆண்டுக்காக பயன்படுத்தக்கூடிய விதமாக தயாரிக்கப்பட்டது. அதேபோன்று 2015 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் முதல் சொத்துக்களை கணக்கு வைக்கக்கூடிய விதத்தில் புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டங்கள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை மேற்கொள்ளப்பட்ட விதமாக ஆண்டிறுதி CIGAS செயலமர்வை நடாத்தும் முறைமைகளை மாற்றி மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் கருத்தரங்கு தொடர்களை நடாத்தாமல் அரச கணக்குகள் திணைக்களத்தினுள் ஒரு நாள் செயலமர்வு நடாத்தப்பட்டது. மேலும் இந்த செயலமர்வுக்காக விடயப் பொறுப்பு கணக்காளர்களை பங்குபற்றச் செய்த அதேவேளை, அதன் மூலம் அறிவூட்டியதற்கு மேலதிகமாக விடயத்தின் பொறுப்புக்கள் பற்றி கணக்காளர்களின் கவனத்தை செலுத்துவதும் இதன் நோக்கமாக இருந்தது. அதன் பிரகாரம் சகல அமைச்சுக்களையும் திணைக்களங்களையும் உள்ளடக்கக் கூடிய விதமாக

CIGAS விடயப் பொறுப்பு கணக்காளர்களின் பங்குபற்றுதலுடன் 14 ஒருநாள் செயலமர்வுகள் இந்தத் திணைக்களத்தில் நடாத்தப்பட்டது. இதன்போது வட கிழக்கு மாகாணங்களிலுள்ள மாவட்டச் செயலகங்களின் கணக்காளர்களுக்ககாக தமிழ் மொழியில் செயலமர்வொன்றை நடாத்தக் கூடியதாகவும் இருந்தது. இந்த ஒருநாள் செயலமர்வின் 2014 ஆம் ஆண்டு இறுதிக் கணக்குகளைத் தயாரிக்கும் விதம், 2015 ஆம் ஆண்டுக்கான கணக்குகளை ஆரம்பிக்கும் விதம் அதேபோன்று ஒவ்வொரு திணைக்களங்களுக்கும் உரிய பிரச்சினைகள் பற்றியும் கலந்துரையாடக் கூடியதாக இருந்த அதேவேளையில், புதிய CIGAS நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கையேடு அடங்கிய இருவட்டு ஒன்றையும் சகல கணக்கு அலகுகளுக்கும் வழங்கக் கூடியதாக இருந்தது. எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ITMIS கருத்திட்டம் பற்றியும் இந்த பயிற்சி அமர்வுகளின் போது கணக்காளர்களின் கவனத்தை ஈர்க்கச் செய்யப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அமைச்சுக்களினதும் திணைக்களங்களினதும் கணக்காய்வாளர்களினதும் விடயப் பொறுப்பு அலுவலர்களினதும் வேண்டுகோளின் பிரகாரம் 17 CIGAS ஒருநாள் செயலமர்வுகளும் சம்பளங்களைத் தயாரிக்கும் நிகழச்சித்திட்டத்திற்காக (Payroll) 17 ஒருநாள் செயலமர்வுகளும் நடாத்தக் கூடியதாக இருந்தது. இந்த செயலமர்வுகளுக்கு மேலதிகமாக ஒவ்வொரு நிறுவனங்களினதும் வேண்டுகோளின் பிரகாரம் அந்த நிறுவனங்களுக்கு மாத்திரம் வரையறுக்கப்பட்ட விஷேட 11 CIGAS நிகழ்ச்சித்திட்டங்களும் Payroll நிகழ்ச்சித்திட்டங்களும் பின்வரும் இடங்களில் நடாத்தப்பட்டன.

| | பயிற்சி | பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்ற திகதி | நிறுவனம் | பயிற்சிச் செயலமர்வு இடம்பெற்ற இடம் |
|---|---|---|---|---|
| 01 | New CIGAS | சனவரி 13 | விவசாய அபிவிருத்தித் திணைக்களம் | பொல்கொல்ல கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனம் |
| 02 | New CIGAS | சனவரி 20 | மாத்தறை மாவட்டச் செயலகம் | மாத்தறை மாவட்டச் செயலகம் |
| 03 | New CIGAS | ஜுலை 24 முதல் 26 வரை | மன்னார் மாவட்டச் செயலகம் | மன்னார் மாவட்டச் செயலகம் |
| 04 | New CIGAS | ஜுலை 31 முதல் ஆகஸ்ட் 02 வரை | சபரகமுவ மாகாண சபை | இரத்தினபுரி கணினிப் பயிற்சி நிலையம் |
| 05 | New CIGAS | ஆகஸ்ட் 12 மற்றும் 13 | கல்வி அமைச்சு | மீப்பே தலைமைத்துவ அபிவிருத்தி நிலையம் |
| 06 | New CIGAS | ஆகஸ்ட் 22 மற்றும் 23 | கண்டி மாவட்டச் செயலகம் | கண்டி மாவட்டச் செயலகம் |
| 07 | Payroll | ஆகஸ்ட் 22 மற்றும் 23 | கண்டி மாவட்டச் செயலகம் | கண்டி மாவட்டச் செயலகம் |
| 08 | New CIGAS | நவம்பர் 03 | திவிநெகம அபிவிருத்தித் திணைக்களம் | அரச கணக்குகள் திணைக்களம் |
| 09 | New CIGAS | நவம்பர் 18 மற்றும் 19 | தபால் திணைக்களம் | அத்துருகிரிய பெருந்தோட்ட முகாமைத்துவ பயிற்சி நிலையம் |
| 10 | New CIGAS | நவம்பர் 25 மற்றும் 26 | மத்திய மாகாண சபை | மத்திய மாகாண சபை |

| | | | | |
|---|---|---|---|---|
| 11 | New CIGAS | டிசம்பர் 04 | சபரகமுவ மாகாண சபை | இரத்தினபுரி கணினிப் பயிற்சி நிலையம் |
| 12 | New CIGAS | டிசம்பர் 11 முதல் 13 வரை | கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டச் செயலகங்கள் | கிளிநொச்சி மாவட்டச் செயலகம் |

கணணி மென்பொருள் தொகுதி அபிவிருத்தி பராமரிப்பு பயிற்சியளித்தல் மற்றும் தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்காக இந்தப் பிரிவினால் அன்றாடம் மேற்கொள்ளப்படுகின்ற சேவைகள் பின்வருமாறு

- கணக்குத் தொகுதிகளைப் பேணுவதற்கு தேவையான ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குதல்
- காணப்படும் விதி மற்றும் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கணக்குகளை வகைப்படுத்தல் மற்றும் கணக்கு குறியீடுகளை உருவாக்கி கணக்கு அறிக்கைகளை பேணுவதற்காகவும் பிரதான கணக்கு அலகுகளுக்கு அவற்றை அனுப்புவதற்கும் துணை நிற்றல்
- குறைந்த காலத்தில் பிரதான கணக்கு அலகுகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட கணக்கு தகவல்களின் செல்லுபடியாகும் காலத்தை பரிசீலனை செய்து ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரியின் மூலம் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு வசதிகளை வழங்குதல்
- கணக்கு மற்றும் புள்ளிவிபரவியல் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய விதமாக அமைச்சுக்களிலிருந்தும் திணைக்களங்களிலிருந்தும் கிடைக்கின்ற தரவுகளைப் பேணுவதுடன் பிரதான கணக்கு தரவுத் தொகுதிக்கு தரவுகளைச் சேர்த்தல், ஆலோசனைகளை வழங்குதல் தரவுகளை செல்லுபடியாக்குதல் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட மாதிரிக்கு தரவுகளை மாற்றுதலும் வழங்குதலும்
- வருடாந்த வரவு செலவின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள், அது தொடர்பான செலவினங்கள் மற்றும் முன்வரும் வருடத்திற்கான தேவைகளை ஏற்பாடு செய்து உயர் தரத்திலான கணக்கு முறையொன்றைப் பேணுவதற்கு அமைச்சுகளுக்காகவும், திணைக்களங்களுக்காகவும் உதவக்கூடிய பயிற்சி கற்கை நெறிகளை மேற்கொள்ளுதல்

## 6.2 முற்பணக் கணக்குகளை தொழிற்படுத்துதல்

### 6.2.1அரசாங்க அலுவலர்களின் பீ முற்பணக் கணக்கு

சகல அமைச்சுக்களினாலும் திணைக்களங்களினாலும் 2013.12.31 ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்படுகின்ற நி.ஒ 506 டீ அறிக்கையின் பிரகாரம் கட்டுப்பாட்டுக் கணக்கு, தனிக் கணக்குகளின் மீது மற்றும் திறைசேரி மீதிகள் உள்ளடங்களாக முற்பண கணக்கின் பொருட்டு சீராக்க அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டது. அந்த அறிக்கையின் பிரகாரம் 39 நிறுவனங்களின் மாற்றங்கள் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் உரிய நிறுவனங்களை அடையாளம் கண்டு

மேற்குறிப்பிட்ட கணக்குகளுக்கிடையில் காணப்படுகின்ற மாற்றங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. அந்த 14 நிறுவனங்களும் 2014 ஆம் ஆண்டில் கணக்குச் சுருக்கங்களின் மூலம் மாற்றங்கள் தீர்க்கப்பட்டுள்ள அதேவேளையில், ஏனைய நிறுவனங்களில் காணப்படுகின்ற மாற்றங்களைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் பற்றி தற்போது பின்னூட்டல்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

மேலும் 2013 ஆம் ஆண்டில் சகல அமைச்சுக்களின் திணைக்களங்களிலும் தனிக் கடன் மீதி வகைப்படுத்தலின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய கடன் நிலுவைகள் பின்வருமாறு ( காலப் பகுப்பாய்வின் பிரகாரம்)

இடமாற்றம் பெற்றுச்சென்ற அலுவலர்கள் (ரூபா 406 மில்லியன்), சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு சென்றுள்ள அலுவலர்கள் (ரூபா 8 மில்லியன்), கூட்டுத்தாபனங்கள் சபைகள் மற்றும் மாகாண சபைகளுக்காக நிரந்தரமாக விடுவிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் (ரூபா 17 மில்லியன்), மரணித்துள்ள அலுவலர்கள் (ரூபா 66 மில்லியன்), ஓய்வுபெற்ற அலுவலர்கள் (ரூபா 355 மில்லியன்), சேவையை விட்டுச் சென்ற / சேவையை முடிவுறுத்தியுள்ள அலுவலர்கள் (ரூபா 429 மில்லியன்), வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ள அலுவலர்கள் (ரூபா 134 மில்லியன்), வரவு செலவு சுற்றறிக்கை இலக்கம் 118, தாபன விதிக்கோவை xxiv அத்தியயாயத்தின் 04 ஆம் உறுப்புரை மற்றும் xxiv அத்தியாயம் 4:5 உப பிரிவின் பிரகாரம் அந்தக் கடன் நிலுவைகளை அறிவிடுவதற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 6.2.2 திறைசேரியின் நானாவித முற்பணக் கணக்குகள்

இந்த முற்பணக் கணக்குகளின் ஊடாக மாவட்டச் செயலகங்களுக்கு நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்டிருந்த முற்பணத்தை அறிவிடுதல் மற்றும் காணாமல் போன காசு, முத்திரை மற்றும் பற்றுச்சீட்டு போன்றவற்றுக்காக வழங்கப்பட்டிருந்த முற்பணங்களை அறவிடுவதற்கு ஏற்படுகின்றமை

2014 ஆம் ஆண்டுக்குரிய பின்வரும் மாவட்டச் செயலகங்களினால் காசின் மூலம் கடன் நிலுவைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

| கணக்கு இலக்கம் | மாவட்டச் செயலகம் | தீர்க்கப்பட்ட நிதி (ரூபா) |
|---|---|---|
| 7000/0/0/25003/419 | அநுராதபுரம் | 40,400.00 |
| 7000/0/0/25003/420 | அம்பாறை | 4,381,869.16 |
| 7000/0/0/25003/428 | கண்டி | 90,000.00 |
| 7000/0/0/25003/443 | மாத்தளை | 25,000.00 |
| **மொத்தம்** | | **4,537,269.16** |

உணவு ஆணையாளர் திணைக்களம் கமக்காரர் அபிவிருத்தி திணைக்களம் மற்றும் திருகோணமலை மாவட்டச் செயலகம் என்பவற்றினால் தீர்க்கப்பட வேண்டிய முற்பணம் சம்பந்தமாக காணப்பட்ட பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக தொடர்புடைய அலுவலர்களின் பங்குபற்றுதலுடன் நான்கு கூட்டத் தொடர்கள் நடாத்தப்பட்டன. இந்தக் கொடுக்கல் வாங்கலுடன் சம்பந்தப்பட்ட ஏனைய நிறுவனங்களாக அநுராதபுரம் மற்றும் பொலநறுவை மாவட்டச் செயலகங்கள் இந்தக் கூட்டத்திற்காக பங்கு பற்றின. உணவு ஆணையாளர் திணைக்களம் மாவட்டச் செயலகங்கள் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட நெல் /அரிசி என்பவற்றை அரசாங்கத்தின் விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்தி விற்பனை செய்யும் போது நட்டம் சம்பந்தமாக தொடர்புடைய மாவட்டச் செயலகங்களுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்ட சீராக்க நடவடிக்கைகள் முடிவடைந்துள்ளன.

**2014 ஆம் ஆண்டினுள் உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட நட்டத்தை பதிவழிக்கும் விண்ணப்பப் படிவம் சம்பந்தமான முன்னேற்றம் பின்வருமாறு**

| மாவட்டச் செயலகம் | முறையான விதத்தில் நட்டத்தைக் கணக்கு வைத்தல் (ரூபா) | விண்ணப்பங்களை அரச கணக்குகள் திணைக்களத்திற்கு சமர்ப்பித்தல் (ரூபா) | நட்டத்தை கணக்கு வைப்பதற்கு அனுமதியைப் பெற்றுள்ள வரவு செலவு திணைக்களத்திடம் ஏற்பாடுகளுக்காக விண்ணப்பித்தல் (ரூபா) |
|---|---|---|---|
| பொலநறுவை | | 68,861,634.45 | |
| அநுராதபுரம் | 20,477,795.75 | | |
| அம்பாறை | 56,258,886.89 | 4,129,525.00 | |
| திருகோணமலை | 5,344,808.25 | | |
| குருநாகல் | 2,903,358.50 | | |
| புத்தளம் | 1,021,284.00 | | |
| கண்டி | | | 715,204.50 |
| இரத்தினபுரி | 431,810.00 | | |
| வவுனியா | 89,418.60 | | |
| மாத்தளை | 1,837,953.40 | | |
| மொனராகலை | 175,008.75 | | |
| பதுளை | | | 790,528.00 |
| **முழு மொத்தம்** | **88,540,324.14** | **72,991,159.45** | **1,505,732.50** |

திருகோணமலை மாவட்டத்தில் பல்நோக்குச் சேவை கூட்டுறவுச் சங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணத் தொகையும் செலுத்தப்படாதிருந்த மீதியாகிய ரூபா 8,757, 383.75 விலை தளம்பல்கள் காரணமாக ஏற்பட்ட நட்டமாகக் காணப்படுகின்ற படியினால் அந்தத் தொகையை பதிவழிப்பதற்காக அனுமதி கிடைக்கப் பெற்றுள்ள அதேவேளையில் முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

நெல்லைக் கொள்வனவு செய்யும் போது அரசாங்கத்தின் விலைக் கொள்கையை நடைமுறைப்படுத்தியதன் காரணமாக வனாத்தவில்லு பிரதேச செயலகத்திற்கு ஏற்பட்ட நட்டமாகிய ரூபா 563,716.00 தொகை மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்திற்கு ஏற்பட்ட நட்டமாகிய ரூபா 449,999.99 அடையாளம் காணப்பட்ட தொடர்புடைய மாவட்டச் செயலகங்களினால் முறையாக அனுமதியைப் பெற்ற பின்னர் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டச் செயலகத்திற்குரியதாக பொலநறுவை கமத்தொழில் அபிவிருத்தி மாவட்டச் செயலகத்தினால் தீர்க்கப்பட வேண்டியிருந்த ரூபா 11,725,998.10 தொகையை பதிவழிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள அதேவேளையில் நட்டம் முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

அநுராதபுர மாவட்டச் செயலகத்திற்கு உரியதாக உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் வரையறுக்கப்பட்ட சருகெத விவசாய அமைப்பினால் செலுத்த வேண்டிய முற்பணங்கள் முறையே ரூபா 666,792.00 மற்றும் ரூபா 480,000.00 ஆகக் காணப்படுகின்ற அதேவேளையில் இந்த நிலுவை நட்டமான படியினால் பிரதான கணக்குக் கொடுக்கும் அலுவலரினால் இந்தத் தொகையை பதிவழிப்பதற்காக அனுமதி அளிக்கப்பட்டுள்ள அதேவேளையில் நட்டம் முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

மகாவலி அமைச்சின் கீழ் காணப்பட்ட ரூபா 3,605,524.64 பற்றுமீதி உணவு ஆணையாளர் திணைக்களத்திற்குரிய நிலுவை என்பதை உறுதிப்படுத்திய பின்னர் முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

இரத்தினபுரி மாவட்டச் செயலகத்தின் கீழ் காணப்பட்ட ரூபா 6,261,658.00 பற்றுமீதியில் ரூபா 2,243,201.27 தொகையொன்று ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகத்திற்கு உரியது என ஹம்பாந்தோட்டை மாவட்டச் செயலகம் அடையாளங் கண்ட பின்னர் முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று நானாவித முற்பணக் கணக்குகளின் கீழ் 2005 ஆம் ஆண்டில் கடுவெல பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பணக் கொல்லையடிப்பின் காரணமாக அதனை செலுத்துவதற்கு திறைசேரி நானாவித முற்பணக் கணக்கிலிருந்து ரூபா 33,620.35 முற்பணத் தொகையை வழங்கியுள்ள அதேவேளையில் கொல்லையடிப்பினால் ஏற்பட்ட நட்டமாகிய இந்தத் தொகையைப் பதிவழிப்பதற்காக அனுமதி கிடைத்த பின்னர் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்காக கணக்குக் குறிப்புகள் பயன்படுத்தப்பட்டன.

2014 ஆம் ஆண்டில் ரூபா 185,714,726.48 நட்டத்தின் பெறுமதியைப் பதிவழிப்பதற்காக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ள அதேவேளையில் ரூபா 112,723,567.03 தொகையை பதிவழிப்பதற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அனுமதி கிடைக்கப்பெற்றுள்ள

தொகையில் ரூபா 111,217,834.53 தொகைக்கான ஏற்பாட்டைப் பெற்று முறையான விதத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ளது.

